Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-07 | 23-09-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-218



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12762) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சிறிலங்கா அரசாங்கத்திற்கு உத்தரவுகள் இட

# உதவி வழங்கும் நாடுகளுக்கு உரிமை கிடையாது!

## ஹெல உறுமய பாராளு. குழுத் தலைவர் சீற்றம்

(கொழும்பு)

**''இலங்கை இனப்பிரச்சினை ஒஸ்லோ பிரகடனத்திற்கு அமையத் தீர்க்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் உள்ள சகல ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும் என கட்டளை இட உதவி வழங்கும் நாடுகளுக்கு எந்தவிதமான உரிமைகளும் கிடையாது''.**

இவ்வாறு ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று முன்தினம் சபையில் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்குகின்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடும் உரிமை கிடையாது என்றும் அவர் சபையில் தெரிவித்துள்ளார். சபாநாயகரின் சிறப்பு அனுமதியுடன் அறிக்கை ஒன்றை விடுத்த அவர்.

(IVஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு அம்பாறையில் பொலிஸ் சார்ஜண்ட் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் பொலிசார் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் வீதிக்கண்காணிப்புப்பணியை முடித்துவிட்டு பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிசார் மீதே நேற்று மாலை இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதன்போது படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜண்ட் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

## நாகர் கோவில் படுகொலை பத்தாம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் படுகொலையின் பத்தாவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பாக சிறிலங்கா விமானப்படையினரின் புக்காராக் குண்டுவீச்சு விமானங்கள் நிகழ்த்திய மிக மோசமான குண்டுத் தாக்குதலால் நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் இருபது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

(IVஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயற்பாடுகளுக்கு ஏற்பாட்டாளராக நோர்வேயை அனுமதிப்பது ஆசியாவிற்கு ஆபத்து!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் நோர்வேயை இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு ஏற்பாட்டாளராக தொடர்ந்து செயற்பட அனுமதிப்பது முழு ஆசிய வலய நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும் என்று சிங்கள இனவாதக் கட்சியான தேசபற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவுக்கு உளவு பார்த்ததாக அநுராவின் ஊடகச் செயலர் நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்காப்பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு உளவு பார்த்ததாக வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவின் ஊடகச்செயலர் நீக்கப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளரும், ஊடகத்துறை அதிகாரியுமான குமாரதாச கிரியவ, அநுராபண்டாரநாயக்கவின் ஊடகச்செயலாளராக நீண்டகாலமாகப் பணியாற்றி வருகிறார். சில நாட்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## த.பு.கழக பாரவூர்தி யாழ்.செல்ல முகமாலை படையினர் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவுக்குள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாரவூர்தி நுழைய சிறிலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக கிளிநொச்சியிலிருந்து சீமெந்து ஏற்றிக்கொண்டு புனர்வாழ்வுக்கழக பாரவூர்தி யாழ்ப்பாணத்திற்குச் சென்றது. முகமாலை சோதனைச்சாவடியில் அந்த பாரவூர்தியைத் தடுத்து நிறுத்திய சிறிலங்கா இராணுவத்தினர் கிளிநொச்சிக்கு பாராவூர்தியை திருப்பிச் செலுத்துமாறு நிர்ப்பந்தித்துள்ளனர். பாரவூர்தியை சோதனையிடமால்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி பெற்று வரும் பொங்குதமிழ் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் இறுதியில் இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கு வலுச் சேர்க்கும் நிகழ்வு எழுச்சிபெறத் தொடங்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் இந்நிகழ்வு சம்பந்தமான சுவரொட்டிகள் காணப்படுவதுடன் பொது மக்களும் அதிகமான பிரச்சார செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறை அதிக எண்ணிக்கையான பொது மக்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது குடாநாட்டின் பல பகுதி

(IV ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள்கட்டுமானப் பயிற்சி நெடுங்கேணியில் ஆரம்பம்

(ஒட்டுசுட்டான்)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் கட்டுமானப் பயிற்சியின் முதலாவது கட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாலை 4.30 மணியளவில் நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் நெடுங்கேணிப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச் சுடரினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றி வைக்க, தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார்.

கருத்துரையில் தமிழினி தெரிவிக்கையில், "ஒவ்வொரு தமிழ் மகனும் எத்தனையோ அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நசுக்கப்பட்ட நிலையில்தான் போரிட முற்பட்டான்" அதேபோன்றுதான் ஒவ்வொருவரின் மனதும் எழுச்சி கொண்டமையினால் கிராமியப் படையாக, எல்லைப்படையாக துணைப்படையாக போரிட்டமையினால்தான் பலவருடங்களாக எதிரி பிடித்த நிலத்தை ஓரிரு நாட்களுக்குள் பிடிக்க முடிந்தது. இதனால் தான் நாம் இன்று இந்தநெடுங்கேணி மண்ணில் உள்ளோம்.

(IV ஆம் பக்கம் பார்க்க)



நான் என் மனதிற்கு நேர்மையாகவும், தூய்மையானதாகவும் தான் எனது பொறுப்பைச் செய்தேன். ஆனால் நான் எனது மக்களுக்கு பணியை முழுமையாக்கவில்லை என்பதையிட்டு பெரும் கவலையடைகின்றேன்.

தியாகி லெப்.கேணல் திலீபன்



# வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

உடையார் கட்டு சுதந்திரபுரம் மத்தியிலுள்ள கணேசன் செல்வகுமார் என்பவருடைய 786ஆம் இலக்கமுடைய, 130 பயன்தரும் தென்னை மரங்களைக்கொண்ட இரண்டரை ($2^{1/2}$)ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- மாணிக்கன் புடவையகம், முல்லைவீதி,விசுவமடு (6452)

### வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி

(19.9.2005) வியாழமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. அரசாங்கத்தில் திடீர் திருப்பங்களும் பாரிய அரசியல் மாற்றங்களும் உண்டாகும். (ஸ்ரீ ரமணாபகவானின் ஞானரகசியமும்,) 15ரூபா கணிப்பாசிரியர்PROF சத்யதாசன் ஆனைக்கோட்டை. 077/ 6547175 (5392)

### விற்பனைக்குண்டு

கிளி/155 ஆம் கட்டையடியில் 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. உரிமையாளருடன் உடன் தொடர்பு கொள்க. 77, விவேகானந்தநகர், கிளிநொச்சி. (6728)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி156 ஆம் கட்டை வைரவர் கோவில்முன்பாக (A-9 அருகாமை)1/2 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு சீலன் இல.12 ஆனந்தநகர் சேவியர் கடைச் சந்தி கிளிநொச்சி. (12650)

# தேர்தல் விதிமுறைகளை அமுலாக்க தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை சிறிலங்கா தேர்தல் திணைக்களம் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களின் சுவரொட்டிகள் , உருவப்படங்கள் உள்ளிட்டவைகளை அகற்ற பொலிசாருக்கு தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. வெளிப்படையான சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்காகவே இத்தகைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சுவரொட்டிகள் உள்ளிட்டவைகளை அகற்றும் பணியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சனாதிபதித்தேர்தல் நடைபெறும் இக்காலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க 65 ஆயிரம் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையற்ற தேர்தலை நடத்துவதற்காக மேலதிக பொலிசாருடன் படையினரும் விரைவில் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சாவு அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை சிவபாலன்

பாலிநகர் வவுனிக்குளத்தினை பிறப்பிடமாகவும், பத்தினியார் மகிழங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை சிவபாலன் 22-09-2005 நேற்று அகாலச்சாவடைந்தார். அன்னார் சிவபாலனின் அன்பு மனைவியும் மேனகாந், வேணுகாந், மோகனகாந் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதிசிவகுரு தெய்வானை தம்பதிகளின் மகளும்,திரு. திருமதி கனகசபாபதிப்பிள்ளையின் மருமகளும், மகேஸ்வரி, தங்கமுத்து, சிவராசா, யோகாம்பிகை, சிவகாமி, தற்மபாலன் சந்திரகுமார் (நோர்வே), உதயகுமார் (நோர்வே), ஜெயராணி (சுவிஸ்)ஆகியோரின் சகோதரியும் சிவபாதமலர், விஜெயலட்சுமி, சிவகுமாரன் (கனடா) சண்முகநாதன்(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு:- 0777667230

தகவல்:-
க.சிவபாலன்,
(கணவர்).

(6730)

## சாவு அறிவித்தல்

### கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் 21.09.2005 அன்று லண்டனில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லர்-தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற அல்வாய் முருகேசு-லக்சுமி, கமலவேணி தம்பதிகளின் மருமகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்ல தம்பி,லக்சுமி மற்றும் பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும், கந்தவரோதயன், ராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரின் மைத்துனரும், கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோரின் தந்தையும், சத்தியலிங்கம், சிவலீலன், சங்கீதா ஆகியோரின் மாமனாரும், ஷைந்தவன், சுருதி,லக்ஷமி, சேயோன், சாருகன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47,The Heights,
Northolt,
Middx UB5 4BP,
U.K,
Phone:0044 20 88691058.

(6732)

தகவல் -
குடும்பத்தினர்.

### தேர்தல் ஆணையாளர் மனுத் தாக்கல்

(கொழும்பு)

உயர் நீதிமன்றம் தமக்கு எதிராக அளித்த தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனக்கோரி தேர்தல் ஆணையாளர் தயாநந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் மனுத் தாக்கல் செய்தார்.

சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டும் எனக் கோரி ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒபல்பே சோபித்த தேரர் தாக்கல் செய்த மனுவின் மீது உயர் நீதிமன்றம் அவருக்கு சார்பாகத் தீர்ப்பு வழங்கியது.

எனினும் இதன்போது மனுதாரரான ஒபல்பே சோபித்த தேரரின் அடிப்படை உரிமையை தேர்தல் ஆணையாளர் மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்த அறிவிப்பானது தம்மீது வாக்காளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் அமைந்துள்ளதாக தமது மனுவில் தெரிவித்துள்ள தேர்தல் ஆணையாளர், இதன் காரணமாக எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதும் நீதியானதுமாக நடத்துவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### நுவரெலியாவில் இரு தமிழர்கள் கைது

(கொழும்பு)

நுவரெலியாவிலுள்ள சனாதிபதி மாளிகை, பிரதமர் மாளிகை மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் ஆகியவற்றை ஒளிப்படம் எடுத்ததாகக் குற்றம் சுமத்தி இரண்டு தமிழர்கள்கடந்த செவ்வாய்க்கிழமைமாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் 1991 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு வழங்கியதாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை நமுனுகல இந்தகல மேற்பிரிவைச்சேர்ந்த அப்பாசாமி கிருஸ்ணசாமி மற்றும் அப்பாசாமி ஜெயராம் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்கள் என நுவரெலியா பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

## வாடகைக்கு

### கழிவு நீர் உறுஞ்சும் வாகனம்

கரைச்சிப் பிரதேசசபையினால் கழிவுநீர் உறுஞ்சும் வாகனம் வாடகைக்கு விடப்படுகின்றது. அதற்கான கட்டணம் வருமாறு.

**கழிவுக்குழி உறுஞ்சுதல்:- ரூபா-1500.00**

**மலக்குழி உறுஞ்சுதல்:- ரூபா-2500.00**

**எடுத்துச்சென்று அகற்றுதல்:- இருவழிக்கும் 01 கிலோ மீற்றர் ரூபா 165.00**

இச் சேவை வேண்டியவர்கள் கரைச்சிப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கட்டணத்தைச் செலுத்தி சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பொ.ன்.நித்தியானந்தன்,**
**விசே ஆணையாளர்.**

(சி.12905)

## 04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13
□
04
□
1982



வீரச்சாவு
23
□
09
□
2001

### கடற்கரும்புலி கப்டன் புலிமகள்
(முத்துலிங்கம் யசோதா)

டிவுக்காய் கந்தகம் சுமந்த
கரிய புலியே-உன்
நினைவோடு எங்கள் இதயத்தில்
சுமந்தோம்-எம் கண்ணீர் அஞ்சலி


இந்நாளில் இவருடன் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட மேஜர் நலலமுத்துவை நினைவுகூருகின்றோம் இன்று நடைபெறும்நிகழ்விலும்மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், நண்டர்கள், உறவினர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்

உடையார்கட்டு (6724)

தகவல்
குடும்பத்தினர்

## 04 ஆம் ஆண்டு நினைவில்...

தாயின் மடியில்
17
□
07
□
1975



கடலின் மடியில்
23
□
09
□
2001

### கடற்கரும்புலி மேஜர்-நல்லமுத்து
(கார்த்திகேசு செந்தில்குமார்)

நான்காண்டானாலும் மறவோம்-உன்முகம்
நாம் இனித் தொடர்வோம்-உன் பணி

இந்நாளில் இவருடன் களப்பலியான கடற்கரும்புலி கப்டன்-புலிமகளையும் நினைவிற் கொள்கின்றோம்.

நிவேதினி வெதுப்பகம்,
(யாழ்சுவை),
கடற்கரை வீதி,
முல்லைத்தீவு. (6113)


தகவல்:-
குடும்பத்தினர்.

# பெரியமடுவில் தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

லெப்டினன்ட் கேணல் தியாகி திலீபனின் நினைவுதின நிகழ்வு நேற்று பெரியமடு பாடசாலையில் காலை 9.00 மணிக்கு அடையாள உண்ணாவிரதத்துடன் இடம் பெற்றது.

பொதுச்சுடரினை மாவீரர்களான அமுதன், இசைச்சுடர் ஆகியோரது தாயாரான இராசதுரை கனகராணி ஏற்றிவைத்தார்.தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் தென்றல்மாறன் ஏற்றிவைத்தார். திலீபனின் திருவுருவப்படத்திற்கான சுடரினை பெரியமடு ஈச்சலவக்கையைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்து மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து பெரியமடு பாடசாலை ஆசிரியர் பெல்மன் அல் மேடா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நினைவுரைகளை அதிபர் ஜெராட்அல்மேடா, தென்றல் மாறன், மன்னார் மாவட்டக்கல்விக்கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெரியமடு ஈச்சலவக்கைப் பகுதி மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர். இதேவேளை திலீபனின் நினைவு நிகழ்வை முன்னிட்டு பெரியமடு ஈச்சலவக்கையிலுள்ள விளையாட்டு மைதானங்கள், வீதிகள், பாடசாலை என்பவற்றில் சிரமதானம் இடம்பெற்றது.

# நல்லூரின் வீதியில் நாயகன் யாகம்



நல்லூரின் வீதியில்
நாயகன் யாகம்
கந்தனின் கண்ணிலும்
கண்ணீர் கோலம்
தேரோடும் வீதிகள்
பாரோடும் பேசின.
பாரதப் பேய்களோ
பேசாமல் இருந்தன.
அகிம்சையின் தாயகம்
பாரதம்
படித்தது ஞாபகம்
அகிம்சையைத் தின்றது
பாரதம்
பார்த்தது தாயகம்.
சொல்லழகன்
சொற்களெல்லாம்
மௌனமொழி பேசின.
"வந்து பாரடா, வந்து பாரடா"
வேகமாய் அழைத்தன
ஈழத்து திசையெல்லாம்
நேருவின் பேரனை
யாருமே வரவில்லை.
வரண்டு போனது
நாவு மட்டுமே
பற்றி எரிந்தது
இலட்சியத் தீ
இன்றும் எரிகிறது.என்றும் எரியும்.

\- இசைநிலா-

# தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் காவல்துறையால் முன்னெடுப்பு

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பகுதியில் தமிழீழ காவல் துறையினரால் தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்ட காவல்துறைப் பொறுப்பாளர் இரஞ்சித்குமார் தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத்தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை காவல் துறையின் நிர்வாகப்பொறுப்பாளர் தே.கானகன் ஏற்றி வைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு இளவேனில் வாணிபப் பொறுப்பாளர் யாழவன் மலர் மாலையினை அணிவித்தார்.கொள்கை முன்னெடுப்புப்பிரிவைச்சேர்ந்த வதனன். கிராமசேவகர் சண்முகநாதன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர். துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் சிறப்புரையாற்றினார்.

இதனையடுத்து தியாகி திலீபன் ஞாபகார்த்த மரம் நாட்டல் நிகழ்வு காவல்துறை வளாகத்தில் துணுக்காய்ப் பணிமனைப் பொறுப்பாளர் வதனகுமாரியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளையில் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த போராளிகள், அரச திணைக்கள அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள், மாணவர்கள் ஆகியோரால் சம காலத்தில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

மக்களை நேசித்த தியாகி திலீபன் அவர்களின் நினைவு நாட்களில் காவல்துறையினரும், மக்களும் ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என்பதானது மிகவும் பொருத்தமான காலகட்டத்தில் நடைபெறும் நற்செயல் எனத் துணுக்காய் காவல் துறைப்பொறுப்பாளர் வதனகுமார் கருத்துக் கூறியுள்ளார்.

# பொதுமக்கள் அமைப்புக்களின் எதிர்ப்பினால் மன்னாரில் இராணுவத் தடைகள் அகற்றல்!

மன்னார் நகரின் மையப்பகுதியில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள், சோதனைச் சாவடிகளைமக்களின் எதிர்ப்புக்களையடுத்து இராணுவம் அகற்றியுள்ளது.

பொதுமக்கள் அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் எமிலியன் யூசுப்பிள்ளை தலைமையிலான பிரதிநிதிகள் குழு சிறிலங்கா இராணுவத்தின் பிரிகேடியர் எஸ்.எம்.டி ராஜபக்ஷவை சந்தித்து இந்தத் தடைகளுக்கு தங்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இந்த வீதித் தடைகளும் சோதனைச் சாவடிகளும் மன்னார் பிரதான வீதி, செபஸ்தியான் வீதி மற்றும் தாழ்வுப்பாடு வைத்திய சாலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து வீதித் தடைகளையும் சோதனைச்சாவடிகளையும் சிறிலங்கா இராணுவம் அதிகரித்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் இன்னலுக்குள்ளாகி வருவதாகவும் இரவு நேரங்களில் தேடுதல் நடவடிக்கை என்று பெயரில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைவதாகவும் பிரிகேடியர் ராஜபக்ஷவிடம் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டது.

இதையடுத்து வீதித் தடைகளையும் சோதனைச் சாவடிகளையும் அகற்ற சிறிலங்கா இராணுவத் தரப்பு ஒப்புக்கொண்டது.

# அவசரகாலச்சட்ட விதிகளில் சனாதிபதித் தேர்தலுக்காக தளர்வு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு அவசரகாலச் சட்ட விதிகளில் சில தளர்வுகளை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கூட்டங்கள் நடத்துவது, ஊர்வலங்கள் நடத்துவது, அறிக்கைகள் வெளியிடுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அவசரகாலச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யத் தீர்மானித்ததாக பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்

விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய, அவசரகாலச் சட்டத்தின கீழ் சனாதிபதித் தேர்தல் நடைபெறுமானால் தமது கட்சி அதனை எதிர்க்கும் என தெரிவித்தார். அவசரகாலச் சட்டம் அமுலிலுள்ள போதிலும் பாரிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறையவில்லை எனச் சுட்டிக் காட்டினார்.இதனால் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவசரகாலச் சட்டம் வாபஸ் பெறப்படவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த முடியும் எனத் தெரிவித்தார்.

எனினும் அவசரகாலச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன் தெரிவித்தார்.

## விண்ணப்பிக்குக

2005 டிசம்பரில் தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவரும் உரிய படிவங்களைப் பூர்த்திசெய்து செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை மதிப்பீட்டு அலுவலரிடம் கையளிக்குமாறு கேட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் N.C.T பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை 2005,2006 இல் மட்டும் நடாத்தப்படவிருப்பதால் இவ்விரு தடவைகளுக்குள்சித்தியடைய வேண்டும். என யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் மா. அலேசியஸ் தெரிவித்துள்ளார்.

# நேர்முகத்தேர்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றும் சகல சுகாதார உதவியாளர்களுக்கு (தொண்டர்களுக்கு) எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேர்முகத்தேர்வு நடைபெறுவதன் மூலம் இவர்கள் சிற்றூழியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். நேர்முகத் தேர்வுக்கு வருவோர் பிறப்புப்பத்திரம், கல்விச்சான்றிதழ், கிராமஅலுவலரின் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் சமுகம் தருமாறும்,நேர ஒழுங்கினை நிறுவனத்தலைவருடாக அறிந்து கொள்ளுமாறும் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறியத்தருகின்றார்.

* * * *

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட தொண்டராசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு 30.09.2005 (வெள்ளி),01.10.2005 (சனி) ஆகிய தினங்களில் காலை 09.00மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும். ஏற்கனவே,நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்ட தொண்டராசிரியர்களும் மேன்முறையீடு செய்த தொண்டராசிரியர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் வலயக் கல்விப்பணிப்பாளருடன் 28.09.2005 இற்குமுன்னர் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# சிம்பாப்வே அணியை இந்தியா 10 விக்கெட்டுக்களால் வென்றது



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதானின் அபாரமான பந்து வீச்சின் மூலம் சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற ரீதியில் இந்திய அணி முழுமையாக கைப்பற்றியுள்ளது.

நேற்று ஹராரேயில் நடைபெற்று முடிந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பத்து விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணியை இலகுவாகத் தோற்கடித்துள்ளது.

இதில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி முதல் இனிங்சில் 161 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி தனது முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து இரண்டாவது இனிங்சை ஆடிய சிம்பாப்வே அணி பிலிக்நோற், மஸகாட்ஸ ஆகியோரின் துடுப்பாட்ட உதவியுடன் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்த்துக் கொண்டது. இரண்டாவது இனிங்சில் சிம்பாப்வே அணி அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றது. இதில் பிலிக்நோற் ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களையும், மஸகாட்ஸ 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இர்பான் பதான் ஐந்து விக்கெட்டுக்களையும், சகீர்கான் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 19 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய இந்திய அணி விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டு போட்டிகளைக்கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் இர்பான் பதான் 21 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளதுடன் இந்திய அணியின் வெற்றியையும் இலகுபடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் சிறிலங்காவிற்கு இனிங்ஸ் வெற்றி!



பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் சிறிலங்கா அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 69 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளதுடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரை 2-0 என்ற நிலையில் முழுமையாக கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் நேற்று நிறைவடைந்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சிறிலங்கா அணியின் 457 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் அணி முதல் இனிங்சில் 191 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 197 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் இரண்டாவது இனிங்சில் பங்களாதேஷ் அணியின் சார்பாக சகரிய நபீஸ் மட்டுமே அதிகபட்சமாக 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சமிந்த வாஸ், ஹேரத் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சிறிலங்கா அணி முதல் இனிங்ஸ் 457/9, பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸ் 191, இரண்டாவது இனிங்ஸ் 197.

# பூப்பந்தாட்ட போட்டி இன்று

கப்டன் இன்பராஜ் ஞாபகார்த்தமாக நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் பூப்பந்தாட்டப் போட்டி இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறுமென மேற்படி கழகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவன பூப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி போட்டி இன்று மாலை 6.30 மணியிலிருந்து நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சோமவன்ச இராணுவத்தை அவமதித்தார்;

# மகிந்த மன்னிப்புக் கேட்கவேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரை அவமதிக்கும் வகையில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆற்றிய உரைக்கு இராணுவத்தினரிடம் மகிந்த ராஜபக்ஷ மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.க.வின் ஊடகவியலாளர் மாநாட்டில் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரசபை மைதானப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, நாட்டிற்கு உரிய வகையில் பாதுகாப்பு வழங்க முடியாவிடில் இராணுவத்தினரை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்றார்.

சிங்களவர்களையும், தமிழர்களையும் கொன்றது இராணுவத்தினரே என்றும், நாட்டிற்கு உரிய வகையில் பாதுகாப்பு வழங்க முடியாவிடில் இராணுவத்தைக் கலைத்துவிட்டு இராணுவ வீரர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்றும் கூறினார்.

அவரின் இந்த உரையின் மூலம் பொலிசாரும் இராணுவத்தினரும் அவமதிக்கப்பட்டுள்ளனர். நாட்டிற்காக உயிர்த் தியாகங்களைச் செய்து பணியாற்றிவரும் இராணுவத்தினரை அவர் இவ்வாறு அவமதித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் அமரசிங்க உரையாற்றியிருப்பதனால் பிரதமர் ராஜபக்ஷவே இராணுவத்தினரிடமும், பொலிசாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார். நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய ஜி.எல்.பீரிஸ், தற்போது கலந்து கொள்ளும் கூட்டங்களில், நாட்டில் பாதுகாப்பு இல்லை. போசாக்கின்மை நிலவுகின்றது. விலைவாசி உயர்ந்துள்ளது என்று பிரதமர் கூறிவருகின்றார்.

இவற்றிற்கு தற்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே பதில் கூற வேண்டும். இந்த அரசாங்கத்தின் பிரதமர் அவரே. இதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அவருக்கும் அவரின் அரசாங்கத்திற்குமே உளளது.

அப்படியிருந்தும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத பிரதமர் நாட்டின் சனாதிபதியானால் இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்விதம் தீவு காணப்போகிறார்? எனக் கேள்வி எழுப்பினார்.

# சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப்பெற

# மகிந்த ராஜபக்ஷ தீவிர முயற்சி

(கொழும்பு)

ஜே.வி.பி, ஹெலஉறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவினைப் பெற்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவினைப் பெறுவதற்காக தீவிர முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவினைப் பெறுவது தொடர்பில் தொடர்ந்தும் மகிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

நேற்றுக் காலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுக் குழுவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளார்.

ஒற்றை ஆட்சிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தென்பகுதியிலுள்ள சக்திகள் தம்முடன் உள்ளமையினால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் மகிந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடனும் மகிந்த ராஜபக்ஷ தொலைபேசிமூலம் தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு விடுதியில் தமிழ் இளைஞர் சடலம்

(கொழும்பு)

கொழும்பு விடுதி ஒன்றில் தமிழ் இளைஞர் சடலமாக கிடந்தது தெரிய வந்துள்ளது.

இறந்த இளைஞர் அம்பாறை அக்கரைப்பற்றைச் சேர்ந்த விவேகனந்தராஜா கந்தசாமி (வயது - 23) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு கதிரேசன் சாலையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த மூன்று வாரங்களாக அவர் தங்கியிருந்துள்ளார். கடந்த மூன்று நாட்களாக அவரைக் காணாத நிலையில் அந்த இளைஞர் தங்கியிருந்த அறையிலிருந்து துர்நாற்றம் வீசியது.

இது குறித்து விடுதியின் உரிமையாளர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிஸ் முன்னிலையில் இளைஞர் தங்கியிருந்த அறையை உடைத்தபோது அவர் இறந்து கிடந்தது தெரியவந்துள்ளது.

இறந்து கிடந்த விவேகனந்தராஜா கந்தசாமியின் சடலம் தற்போது கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வன்னியிலிருந்து யாழ். சென்றோர்

# தகவல் திரட்டுவதில் இராணுவம் மும்முரம்!

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்தவர்களின் விபரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர். குறிப்பாக இரண்டாயிரத்து இரண்டின் பின்னரும் அண்மைக்காலத்தில் வந்தவர்களின் விபரங்களையும் வாராந்தம் இவர்கள் சேகரித்து வருகின்றார்கள்.

கடந்த மாதம் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது உறுப்பினர்களை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து இப்பணியை கடுமையாக மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம அலுவர்களிடம் செல்லும் இராணுவத்தினர் அப்பியாசப் புத்தகத்தில் வன்னியால் வந்தவர்களின் விபரங்களைப் பதிவதுடன் கையொப்பமும் பெற்றுச் செல்கின்றார்கள் அவசர கால நிலமை பிரகடனப்படுத்தியதை சாதகமாகப் பயன்படுத்தும் இராணுவத்தினர் கிராம அலுவலர்கள் தமக் குப் பொறுப்பான பிரதேச செயலா ளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக வரும்படி கூறிய போதிலும் அவசரகால நிலமையில் தாங்கள் கேட்கும் விபரங்களை கட்டாயம்தர வேண்டும் என வற்யுறுத்திப் பெற்றுச் செல்வதாகவும் கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள்

அதிகமாக 514 படையணியினர் தமது எல்லைக்கு உடபட்ட கிராம அலுவலர்களிடம் இந்தவகையில் விபரங்களைப் பெற்று வருவதாக கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள். இது சம்பந்தமாக உரிய உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் கிராம அலுவலர்களினால் கொண்டு வரப்பட்டுள்ளது

# மூன்று வேட்பாளர்கள்

# கட்டுப்பணம் செலுத்தினர்

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்கள் தேர்தல் திணைக்களத்தில் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சார்பிலும், ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய ஆகியோரின் சார்பிலும் நேற்று கட்டுப் பணம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இலங்கை தேசிய முன்னணியின் சார்பில் விமல் கீனகே ஏற்கனவே தனது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

## 100 கோடி ரூபா ஒதுக்கீடு

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலுக்காக 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.தேர்தலுக்கான செலவுகளை சமாளிப்பதற்காக திறைசேரி 100 கோடி ரூபாவை தேர்தல் திணைக்களத்திற்கு ஒதுக்கியுள்ளது.

### மக்கள்.....

ஆனால் தற்போது இந்த உப்புச்சப்பில்லாத சமாதான சூழலில் எதுவும் மக்களுக்கு வழங்கப்படவில்லை சந்திரிகா ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் எம்மை ஒரு பயங்கரவாத ஆயுதக் குழு என்று அறிக்கை விடுகிறார். மறுபக்கத்தில் சமாதான பேச்சுவார்த்தைக்கு தயார் என்று கூறுகிறார்.

இதைப்பார்த்தால் தமிழ் மக்களையும் ஏமாற்றி சிங்கள மக்களையும் ஏமாற்றுவதோடு சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்றார்.

இந்த ஏமாற்று நடவடிக்கையை முறியடிக்க வேண்டும். இதற்கு தலைவரின் கரங்களை மேலும் பலப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கையால்தான் இந் நிலைக்கு உயர்ந்தோம். தலைவரின் கரங்களைத் தொடர்ந்து பலப்படுத்தினால் எம்மீது யுத்தத்தை திணிக்கும் எதிரிக்கு எங்களுக்கு என்று ஒருதலைவன் இருக்கிறான். எங்களுக்கு என்று ஒரு படை, கொடி என்பன உண்டு என்பதை உறுதிப்படுத்துவதோடு எம் மண்ணில் நாமும் சுதந்திரமாக வாழ்வதோடு எம்மை வேறு இனத்தவன் ஆளமுடியாது என்பதை நிருபித்து காட்ட முடியும் என்றார்.

### சிறிலங்கா....

வடக்கு கிழக்கில் உள்ள அமைப்புக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் எமது நடவடிக்கைகள் பற்றி பிறர் தீர்மானிப்பதை உள்விவகாரங்களில் தலையிடும் விடயமாகவே நாம் காண்கின்றோம்.

எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதை எமது நாட்டின் இறைமையை பாதிக்கும் செயலாகவே நாம் கருதுகின்றோம்.

கிறிஸ்தவ கத்தோலிக்க மத ஆதிக்கமுள்ள இந்த உதவி வழங்கும் நாடுகள் பலநூற்றாண்டு பௌத்த பாரம்பரியம் மிக்க எமது நாட்டிற்கு கட்டளையிட்டு காரியங்களைச் சாதித்துக்கொள்ள முனைவது கண்டிக்கத்தக்கதாகும். நோர்வே போன்ற நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்வதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் உடன்பாடுகளை ஏற்றுக்கொள்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியும். வெளியில் இருப்பவர்கள் எல்லாம் எமது நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவது பற்றி அரசாங்கம் தெளிவானதொரு நிலைப்பாட்டை எடுத்தாகவேண்டும்

### நாகர்...

மாணவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு பருத்தித்துறை கிராமக் கோட்டில் அமைந்துள்ள நாகர் கோவில் மகாவித்தியாலய தற்காலிகப் பாடசாலையில் அதிபர் சி.மகேந்திரம் தலைமையில் காலை பத்து மணிக்கு நடைபெற்றது.

### மகிந்தவுக்கு....

களுக்கு முன்னதாக அவரை அநுரா பண்டாரநாயக்க திடீர் வேலை நீக்கம் செய்துள்ளார்.

தனது அலுவலகத்தில் நடைபெறும் செய்திகளை மகிந்த ராஜபக்ஷவுக்கு உளவு சொல்லும் வேலையை குமாரதாச கிரிபவ செய்து வந்ததாகத் தகவல் கிடைத்ததையடுத்து எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் உடனடியாக அவரை அநுரா நீக்கியதாக அரசுத் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

குமாரதாச கிரிபவவிடம் விளக்கம் கூட அநுரா கேட்கவில்லை என்றும் தெரிகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்குத் துரோகம் செய்து கட்சியை மகிந்தராஜபக்ஷ காட்டிக் கொடுத்ததால் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரப் பணிகளிலிருந்து தான் விலகிக்கொள்வதாக மகிந்தவுக்கு அநுரா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் சு.க.வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள்

# 75 பிஸ்ரல்குழு உறுப்பினர்களாம்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நடைபெறும்காலப்பகுதியில் தங்களின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்காக சுமார் 75 பிஸ்ரல் குழு உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதே சங்களுக்கு வந்திருப்பதாக கொழும்பு ஊடகம்ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது. அரச கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் மற்றும் வவுனியாப் பிரதேசங்களுக்கு பிஸ்ரல் குழு உறுப் பினர்கள் வந்திருப்பதாக பாதுகாப்பு படையின் உளவுப்பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சியிலிருந்து வந்துள்ள இந்தப்பிஸ்டல் குழுவினர் ஓமந்தை சோதனைச் சாடியினூடாக வராது விடத்தல் தீவு கடல்பகுதியாலும் மற்றுமொரு இரகசியவழியாலும் இராணுவக்கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் பிரச்சாரநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபின்னர் விடுதலைப் புலிகள் இலக்குகளை மிகச்சுலபமாக அடையமுடியும் என்பதனால் இவ்வாறு பெருமளவிலான பிஸ்ரல் குழு உறுப்பினர்கள் வந்திருப்பதாகவும் தேர்தல் முடிவடைவதற்குள் மாற்றுத் தமிழ்குழுக்களின் பிரதிநிதிகளையும் இராணுவ உளவாளிகளையும் படுகொலை செய்வதே அவர்களின் முக்கிய நோக்கம் என்றும் அந்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்தவாரத்தில் மாற்றுக்குழு உறுப்பினர்கள் மற்றும் இராணுவ உளவாளிகள் பலர் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டநிலையில் வவுனியாவில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.பிஸ்ரல் குழுவின் செயற்பாடுகள் தொடர்வதால் மாற்றுக்குழு உறுப்பினர்கள் தங்களின் இடங்களை விட்டு வெளியேறியுள்ளதுடன் இரவில் மக்களின் நடமாட்டங்கள் பெருமளவில் குறைந்து நகர் வெறிச் சோடிக் காணப்படுவதாகவும் அந்த ஊடகச் செய்தி தெரிவிக்கின்றது.

**எழுச்சி....**களிலும் பல்கலைச் சமூகத்தினர் சென்று பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். இவர்களுடன் பொது மக்களும் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடக் கூடியதாகும்

### த.பு.க...

கூட திருப்பிச் செல்லக் கூறுவது ஏன் என்று ஓட்டுநர் கேள்வி எழுப்பியும் இராணுவத்தினர் பதிலளிக்க மறுத்துவிட்டனர். இதனால் யாழ்.இல். மேற்கொள்ளப்பட்டிருந்த கட்டுமானப் பணிகள் முடங்கிக் கிடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### சமாதான....

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற இரு தரப்பு வேட்பாளர்களும் நோர்வே நாட்டின் செயற்பாடுகள் தொடர்பாக தமது கருத்தை பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை நோர்வே பல்வேறு தடவைகள் நியாயப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அண்மையில் கூட ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயன்றபோதும் நோர்வே அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளது. இதற்கு முன்னர் நோர்வே தமது நாட்டில் கடற்புலிகளுக்கு பயிற்சிகளை வழங்கியதும், புலிகளுக்கு அதி சக்தி வாய்ந்த வானொலி உபகரணங்களை வழங்கியதும் யாவரும் அறிந்த விடயமே.

விடுதலைப் புலிகளுக்கு அனைத்து விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கும் நோர்வேயை எந்த விதத்திலும் இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.